

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 05.09.2025 அன்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.58 காலனி ரோடு, கிராப்பட்டியில் பொதுநிதியின் கீழ் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு அலுவலக பயன்பாட்டுக் கட்டிடத்தை திறந்து வைத்து அப்பகுதியில் நீண்ட காலமாக வசித்து வரும் 116 குடியிருப்பு வாசிகளுக்கு பட்டாக்களை வழங்கி உரையாற்றினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் வே.சரவணன், மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ர.ராஜலட்சுமி, திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் அருள், நகர் ஊரமைப்பு குழு உறுப்பினர் வைரமணி, நகர பொறியாளர் சிவபாதம், உதவி ஆணையர்கள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டத்தில் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான

# மாநில அளவிலான அடைவுத் தேர்வு தொடர்பான ஆய்வுக்கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது!

அரியலூர், செப். 11 -

அரியலூர் மாவட்டம், அரியலூர் கோல்டன் கேட்ஸ் குளோபல் பள்ளியில், பள்ளிகல்வித்துறையின் சார்பில் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான மாநில அளவிலான அடைவுத் தேர்வு 2025 (SLAS) ஆய்வுக்கூட்டம் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாநில அளவிலான அடைவுத் தேர்வு மீளாய்வு தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்று வருகிறது. அரியலூர் மாவட்டமானது SLAS தரவரிசையில் மாநில அளவில் 13வது இடம் பெற்றுள்ளது. மாவட்ட வாரியான பொதுத்தேர்வு தரவரிசையின்படி 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் முதலிடம் பெற்றுள்ள அரியலூர் மாவட்டத்திற்கு பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 8வது இடத்தையும் பெற்றுள்ளது. வருகின்ற பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விலும் முதலிடம் பெறுகின்ற வகையில் அனைவரும் பணியாற்ற வேண்டும். சிறப்பாக செயல்பட்டு வரும் தா.பழூர், ஜெயங்கொண்டம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண்டிமடம், திருமானூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் மேலும் சிறப்பாக பணியாற்றி சிறப்பாக செயல்படும் வட்டாரம் என்ற பிரிவுக்குள் வரவேண்டும். அரியலூர் மற்றும் செந்துறை பகுதியைச் சார்ந்தோர்கள் சற்று கூடுதலாக முயற்சி செய்தால் அரியலூர் மாவட்டம் முதலிடம் பெறுவதை தொடர்ந்து தக்க வைத்து கொள்ள முடியும்.

இந்த SLAS அறிக்கையானது மாநில அளவிலோ, மாவட்ட அளவிலோ, வட்டார அளவிலோ கொடுக்கப்படவில்லை. இது பள்ளி அளவில் தனிப்பட்ட செயல்பாடு அறிக்கையாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக தமிழ்நாடு முழுவதும் 9,80,340 குழந்தைகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளனர். 3 மற்றும் 5 வகுப்பு எனில் 20 குழந்தைகளும், 8ஆம் வகுப்பு எனில் 30 குழந்தைகளும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளனர். SLAS அறிக்கையானது ஆசிரியர்களுக்கு மாணவர்களின் கல்வியின் புரிதல் குறித்த எண்ணத்தை உணர்த்தும் விதமாக அமைந்துள்ளது. இது குறித்த ஆசிரியர்களின் கருத்தை பெற வேண்டும் என்ற நோக்கத்தில்தான் கடந்த ஜூன் மாதம் சென்னையில் உள்ள பேராசிரியர் அன்பழகன் பள்ளி வளாகத்தில் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் தேவைப்படும் பள்ளிகள் குறித்தும், பள்ளி இடைநிற்றல் மாணவர்கள் எண்ணிக்கை, மாணவர்களின் சேர்க்கை விவரங்கள் உள்ளிட்ட தகவல்கள் குறித்தும், ஊடகங்கள் மற்றும் பத்திரிக்கைகள் வாயிலாக வரப்பெறும் பாராட்டுக்கள் மற்றும் விமர்சனங்களின் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆசிரியர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இத்தகைய கூட்டங்கள் நடைபெற்றுவருகிறது. தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தலைமையாசிரியர்களை சந்தித்து அவர்களின் தேவைகள் மற்றும் கருத்துக்களை அறிந்துகொள்ளும் வகையில் 26 மாவட்டங்களில் இக்கூட்டம் நடத்தப்பட்டு, 27வது மாவட்டமாக இன்று அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது. SLAS அறிக்கையினை பள்ளி தலைமை ஆசிரியர்கள் பள்ளியின் மற்ற அனைத்து ஆசிரியர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும். பின்தங்கியுள்ள செயல்பாடுகளில் முன்னேற்றம் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாணவர்களிடம் கேள்விகளின் புரிதல்களை ஏற்படுத்தவேண்டும்.

மாணாக்கர்களுக்கு எழுத்துக்களை கொண்டு சொற்கள் உருவாக்கவும், சொற்களை கொண்டு சொற்றொடர்களை உருவாக்கவும் தொடர்ந்து பயிற்சி தரவேண்டும். மாணவர்களின் அறிவுப் பசியை போக்கும் வகையில் எண்ணும் எழுத்தும் திட்டத்தின் கீழ் ஆசிரியர்கள் பாட்டு பாடுதல், கதை சொல்லுதல், கல்வி உபகரணங்கள் பயன்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளின் மூலமாக பாடங்களை கற்பித்து வருகின்றனர். மாணாக்கர்களுக்கு கல்வி கற்பதில் ஆர்வத்தினையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்திட வேண்டும். ஸ்மார்ட் போர்டு மற்றும் இணையதளங்களின் வாயிலாக மாணவர்களிடம் கற்றல்திறனை மேம்படுத்திட வேண்டும். மாணவர்களின் கற்றல் திறனில் எவ்வித இடையூறும் ஏற்படாமல் இருக்கும் வகையில் தமிழ்நாடு அரசு தொடர்ந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

பள்ளி பாடப்புத்தகங்களில் கடினமாக உள்ள பாடங்களை எளிதாக ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நடத்திடும் வகையில் மணற்கேணி செயலியில் பள்ளி பாடங்கள் வீடியோ வடிவில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் அனைவரும் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும். வரும் காலங்களில் தேர்வு முடிவுகள் எண்ணிக்கையின் அடிப்படையில் இல்லாமல் கல்வி தரத்தின் அடிப்படையிலேயே இருக்க வேண்டும். மாணவர்களின் கற்றல் திறன் புரிதல் குறித்த செயல்திட்டத்தினை ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும். இனிவரும் காலங்களில் அரியலூர் மாவட்டத்தினை கல்வியில் முன்னுதாரணமாக குறிப்பிடும் வகையில் அனைத்து ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்களும் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

இவ்வாய்வு கூட்டத்தில் அரசு பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியை சேர்ந்த 250 தலைமை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தனது உரையின் போது தலைமை ஆசிரியர்களுடன் கலந்துரையாடி தங்கள் பள்ளியில் அடைவுத் தேர்வு முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கற்பித்தல் பணிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநிலக் கல்வியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் இணை இயக்குநர் செ. அமுதவல்லி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) ஆ.பாலசுப்ர மணியன், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் முனைவர். செ.பாலசுப்ரமணியன், மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க கல்வி) ஆ. ரமேஷ், மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளி) சீ.சித்ரா தேவி மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர்கள், அனைத்து ஒன்றிய வட்டார மேற்பார்வையாளர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர்பேட்டை ஸ்ரீ சாய் மஹாலில் நடந்த விழுப்புரம் வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் ராம சரவணன், விழுப்புரம் மாவட்ட மக்கள் செய்தி தொடர்பாளரும் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினருமான செல்வி ராமசரவணன் மகள் சாய் ஸ்ரீ மற்றும் தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மோகன் குமார் – நளினி ஆகியோரின் மகன் ஜீனப் பிரியன் ஆகியோரது திருமண வரவேற்பு விழாவில்விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி .வி .எம் .பி.எழிலரசன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகரக் கழக தி.மு.க. நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளனர்.

## முரசொலி அறக்கட்டளை சார்பில் "முரசொலி செல்வம்" விருது!



கடந்த 21.10.2024 அன்று சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நடைபெற்ற 'முரசொலி செல்வம் அவர்களின் படத்திறப்பு' நிகழ்ச்சியில்,

"முரசொலி செல்வம் அவர்கள் பெயரால் ஆண்டுதோறும் விருது வழங்குவது; அதனை ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் முப்பெரும் விழா நிகழ்ச்சியில் வழங்கப்படும்" என திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவித்ததற்கிணங்க;

ஊடகத்துறையில் ஐம்பது ஆண்டுகால அனுபவம் பெற்றவரும் - 'தி இந்து', 'பிசினஸ் இந்தியா', 'அவுட் லுக்' ஆகிய பத்திரிகைகளில் முக்கியப் பொறுப்புகளை வகித்தவரும் - இங்கிலாந்தில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் Reuters Fellow-ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒன்றிய - மாநில அரசு உறவுகள் பற்றி விரிவான ஆய்வை மேற்கொண்டவரும் - பத்து ஆண்டுகள் தெற்காசிய ஊடக வளர்ச்சி நிறுவனமான Panos South Asia-வின் நிருவாக இயக்குநராகச் செயல் பட்டவரும் - அதே காலத்தில் Global forum for Media Development-இன் துணைத் தலைவராகப் பணியாற்றியவரும் - தற்போது, தமிழ்நாடு அரசு புதிதாக நிறுவியுள்ள சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தின் தலைமை இயக்குநராகப் பணியாற்றி வருபவரும் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலை உலகப் புகழ்பெற்ற பெங்குயின் நிறுவனத்திற்காக ஆங்கிலத்தில் "Karunanidhi - A Life" என்ற பெயரில் எழுதியவருமான

**மூத்த பத்திரிகையாளர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன்** அவர்களுக்கு



2025ஆம் ஆண்டிற்கான **'முரசொலி செல்வம் விருது'** வழங்கப்படும் என அறிவிப்பதில் முரசொலி அறக்கட்டளை மிகுந்த மகிழ்ச்சி அடைகிறது.

2025ஆம் ஆண்டிற்கான 'முரசொலி செல்வம் விருது' வருகிற 17-09-2025 அன்று மாலை 6.00 மணியளவில் கரூர், கரூர் பை-பாஸ் சாலை, கோடங்கிபட்டியில் நடைபெறும் 'தி.மு.க. முப்பெரும் விழா'வில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்களால் வழங்கப்படவிருக்கிறது.

நாள்: 09.09.2025 **முரசொலி அறக்கட்டளை**

### அரசியல் அமைப்புச் சட்டத்தின் வழிநின்று

# சி.பி.இராதாகிருஷ்ணன் தமது கடமைகளை ஆற்றுவார் என்று நம்புகிறேன்!

## குடியரசுத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, செப்.11 –

குடியரசுத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில், "அரசியலமைப்புச் சட்டத்தின் வழிநின்றும், மக்களாட்சிக் கருத்தியல்களின் வழிநின்றும் சி.பி.இராதாகிருஷ்ணன் அவர்கள், தமது கடமைகளை ஆற்றுவார் என நம்புகிறேன்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**குடியரசுத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு திரு.சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு எனது வாழ்த்துகள். அரசியலமைப்புச் சட்டத்தின் வழிநின்றும், நமது நாட்டின் மக்களாட்சிக் கருத்தியல்களின் வழிநின்றும் அவர் தமது கடமைகளை ஆற்றுவார் என்று நம்புகிறேன்.**

**மேலும், இந்திய மக்களாட்சியின் உணர்வை நிலைநாட்டும் வகையிலும், நாம் கொண்ட கொள்கைகளை வெளிப்படுத்தும் வகையிலும் மிக உறுதியோடு போராடிய சுதர்ஷன் ரெட்டி அவர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### குடியரசு துணைத் தலைவர் தேர்தல்:

# சி.பி.ராதாகிருஷ்ணன் வெற்றி!



புதுடெல்லி, செப்.11 –

குடியரசு துணைத் தலைவர் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் மொத்தம் 781 உறுப்பினர்கள் வாக்களிக்க தகுதி பெற்றவர்கள் ஆவர். காலை 10 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை நடைபெற்றது.

தேர்தலில் பதிவான வாக்குகள் உடனடியாக எண்ணப்பட்டன. இதில், 767 வாக்குகள் பதிவாகின. 14 உறுப்பினர்கள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. அதேவேளை, பதிவான 767 வாக்குகளில் 15 வாக்குகள் செல்லாதவை என அறிவிக்கப்பட்டது.

எஞ்சிய 752 வாக்குகளில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் சி.பி.ராதாகிருஷ்ணன் 452 வாக்குகளையும், காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணி வேட்பாளர் சுதர்சன் ரெட்டி 300 வாக்குகளையும் பெற்றனர்.

இதன் மூலம் 152 வாக்குகள் வித்தியாசத்தில் பா.ஜ.க. கூட்டணி வேட்பாளர் சி.பி.ராதாகிருஷ்ணன் வெற்றி பெற்றார். அவர் குடியரசு துணைத் தலைவராக விரைவில் பதவியேற்க உள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை

## கழகத்திலிருந்து நிரந்தரமாக நீக்கம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

வேலூர் மாவட்டம், குடியாத்தம் சட்டமன்றத் தொகுதி, பேர்ணாம்பட்டு தெற்கு ஒன்றியம், நரியம்பட்டு ஊராட்சி மன்றத் தலைவி திருமதி பாரதி, கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் நிரந்தரமாக நீக்கி (Dismiss) வைக்கப்படுகிறார். இவரோடு கழகத்தினர் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 09.09.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



கடலூர் மேற்கு மாவட்டம், விருத்தாசலம் வடக்கு ஒன்றிய கழகம், மு.பட்டி ஊராட்சியில் கிளை கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மு.குலோத்துங்கன் சிறப்புரையாற்றினார். ஒன்றிய கழக செயலாளர் கனக.கோவிந்தசாமி தலைமை தாங்கினார். ஒன்றிய பொருளாளர் ஆர்.ஜி.சாமி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பட்டி.சு.வசந்த குமார் முன்னிலை வகித்தனர். மாவட்ட இலக்கிய அணி தலைவர் பட்டி.கருணாநிதி, ஒன்றிய துணை செயலாளர் அன்பழகி ராஜேந்திரன் , மாவட்டப் பிரதிநிதி மதியழகன், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சௌந்தரராஜன், ஜெகதீஸ்வரன், கிளை செயலாளர்கள் தங்கதுரை, விஜயகுமார், கோபால் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.